முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் என்றால், தீர்ந்துவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் எல்லாக் கோரிக்கைகளையும் சொல்கின்றவரை எனக்கு நேரமில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், பெருமாள்கோவில் வடக்கு வீதியில் உள்ள வீட்டில் 8-5-2018 அன்று திரு. கணேசன் என்பவர் தொலைக்காட்சிப் பெட்டிக்கு கேபிள் இணைப்பு கொடுக்க முற்பட்டபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். இதுசம்பந்தமாக காவல் துறையினர் விசாரணைக்கு வந்தபோது, அவருடைய சகோதரர் திரு. ராஜு என்பவர் தனது அண்ணன் எவ்வாறு இறந்தார் என்பதைக் காவலர்முன் காண்பிப்பதற்காக மீண்டும் தொலைக்காட்சிப் பெட்டிக்கு இணைப்பு கொடுக்க முற்பட்டபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். இவ்விருவரும் உயிரிழந்த செய்தி அறிந்து நான் மிகவும் வேதனை அடைகின்றேன். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த சகோதரர்கள் திரு. கணேசன் மற்றும் திரு. ராஜு ஆகியோரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு, திரு. கணேசன் மற்றும் திரு. ராஜு ஆகியோரின் குடும்பத்திற்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஈ) கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, பொலக்குணம் கிராமம், வெடிவிபத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு என்ன நிகழ்வு குறித்துக் கொண்டுவருகிறீர்கள், சொல்லுங்கள்.*

***திரு. கு. பிச்சாண்டி**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, சு. பொலக்குணம் கிராமத்தில் 31-5-2018 அன்று கிணறு தூர்வாரும்*

பணியில் ஈடுபட்டிருந்த கெங்கனந்தல் கிராமத்தைச் சேர்ந்த குமார், தங்கராஜ், சீத்தாராமன் ஆகியோர் திடீர் வெடிவிபத்தில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். அவர்களுடைய குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்க வேண்டும். ஒருவருடைய தாயார் விஷம் குடித்து இறந்துவிட்டார். அவர்களுடைய குடும்பத்தைப் பாதுகாப்பதற்கு எவரும் இல்லையென்ற வகையில், அப்படிப் பாதிக்கப்பட்ட குடும்பத்தில், படித்திருக்கின்ற இளம் விதவைகளுக்கு சத்துணவுத் துறையில் வேலைவாய்ப்பினை வழங்க வேண்டுமென்றும், நிவாரணத் தொகையை 20 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-40

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் வட்டம், பொலக்குணம் கிராமத்தில், 31-5-2018 அன்று, பாறைகளை வெடிக்கச் செய்து கிணற்றை ஆழப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த திரு. மாணிக்கம் என்பவரின் மகன் திரு. குமார்; திரு. பாண்டியன் என்பவரின் மகன் திரு. தங்கராஜ் மற்றும் திரு. நீலகண்டன் என்பவரின் மகன் திரு. சீத்தாராமன் ஆகியோர், 31-5-2018 அன்று மண் சரிந்து உயிரிழந்துள்ளனர் என்ற செய்தியறிந்து நான் மிகவும் வேதனையடைகிறேன். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த 3 நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு, திரு. குமார், திரு. தங்கராஜ், திரு. சீத்தாராமன் ஆகியோரின் குடும்பத்திற்கு தலா 5 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் மூலம் நிவாரணமாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். நிலத்தின் உரிமையாளர் திரு. பாலசுப்ரமணியன், 1-6-2018 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார். இது தொடர்பான வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது என்ற விவரத்தை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதியில்லை திரு. தமிமுன் அன்சாரி. (குறுக்கீடு) இருங்கள். நீங்கள் என்னிடம்

கொடுத்திருக்கின்ற பிரச்சினைக்கு பதில் சொல்வதென்றால், மத்திய அரசாங்கத்திடமிருந்துதான் பதில் கேட்டு வாங்க வேண்டும். (குறுக்கீடு) இல்லை. இல்லை. இதையெல்லாம் செய்ய முடியாது. உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) நான் மத்திய அரசிடமிருந்து பதில் கேட்டு வாங்க வேண்டும். இதையெல்லாம் செய்ய முடியாது. தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடு) இந்த அவையினுடைய நேரத்தை வீணாக்காதீர்கள். உட்காருங்கள்.

(உ) திருவள்ளூர் தொகுதி, இலட்சுமிவிலாசபுரத்தில் மணல் அள்ளுவதைத் தடை செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. வி.ஜி. ராஜேந்திரன், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திருவாலங்காடு பகுதியில் உள்ள இலட்சுமிவிலாசபுரம் என்ற கிராமத்தில், கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே அரசே மணல் அள்ளுவதாக அங்கு பொதுமக்கள் கூடி கிட்டத்தட்ட ஒரு வார காலமாக போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்னிடம் கொடுத்துள்ள அறிவிப்பில் என்ன கொடுத்திருக்கிறீர்களோ, அதை மட்டும் சொல்லுங்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *அதைத்தான் சொல்கிறேன். தயவு செய்து அரசு முன்வந்து அதைத் தடை செய்து, விவசாய மக்களைக் காப்பாற்ற வேண்டும். ஏனென்றால் விவசாயிகள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கொடுத்திருக்கின்ற அறிவிப்பை நான் துறைக்கு பதிலுக்காக அனுப்பியிருக்கிறேன். பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள்.*

(ஊ) திண்டுக்கல் மாவட்டம், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் பாலை ஆவின் நிறுவனமே கொள்முதல் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, என்னவென்று சொல்லுங்கள்.*